2010 ஏப்ரல் 6] [திரு. து. ரவிக்குமார்]

Inspectors மீது நம்முடைய அரசு தயவு தாட்சண்யம் இல்லாமல் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். அது மட்டுமல்லாமல், இந்த நபர்களின் பின்னணியிலே எவ்வளவு செல்வாக்கு மிக்கவர்கள் இருந்தாலும், அதைப்பற்றிக் கிஞ்சிற்றும், கவலைப்படாமல் உறுதியாக இவர்கள்மீது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னதுபோல, கொலை முயற்சி வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று விடுதலைச் சிறுத்தைகள் சார்பிலே கேட்டு அமைகிறேன். நன்றி.

முற்பகல் 11-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி**: மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, காலையிலிருந்து காலாவதியான மருந்துகளால், மக்களுக்கு ஏற்படும் ஆபத்து, அதனை உடனடியாக நடவடிக்கை எடுத்து ஒழிக்க வேண்டுமென்ற அச்சுறுத்தல் என்ற நிலையில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள், அ.தி.மு.க சார்பில் திரு. சேகர்பாபு அவர்களும், இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், பா.ம.க சார்பில் திரு. வேல்முருகன் அவர்களும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. நன்மாறன் அவர்களும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் திரு. குணசேகரன் அவர்களும், ம.தி.மு.க சார்பில் டாக்டர் சதன் திருமலைக்குமார் அவர்களும், விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பில் திரு. ரவிக்குமார் அவர்களும், தங்களுடைய கருத்துகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள்.

இந்த விவாதம் நம்மிடையே ஏற்படுத்தியுள்ள உணர்வுக்கும், எச்சரிக்கைக்கும், அதே நேரம் இந்த மாமன்றத்திற்கு, வெளியேயுள்ள மக்களிடத்திலே ஏற்படுத்தியுள்ள பீதிக்கும் இடையேயுள்ள வேறுபாட்டை நாம் மறந்துவிடக் கூடாது. நாம் அதைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், எந்த அளவிற்கு இது இந்திய நாட்டையோ அல்லது தமிழ்நாட்டையோ அல்லது தமிழ்நாட்டிற்கு அருகிலேயுள்ள மாநிலங்களையோ பாதித்திருக்கிறது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து, இங்கே பேசுகிறோம் என்றாலுங்கூட, இதனுடைய விளைவு வேறு விதமாக ஆகி மக்களிடத்திலே ஒரு பெரும் பீதியை ஏற்படுத்த நாம் காரணகர்த்தர்களாக ஆகிவிடக்

கூடாது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முதலில் ஒரு குறிப்பை உங்களுக்கு விளக்க விரும்புகிறேன்.

தமிழகத்தில் 539 மருந்து தயாரிப்பு நிறுவனங்களும், 42,500 சில்லறை மற்றும் மொத்த மருந்து வியாபாரிகளும் உள்ளனர். கடந்த 2009 ஆம் ஆண்டுதான் மத்திய அரசு பொதுமக்களுக்குத் தரமாக மருந்துகள் கிடைக்கவும், போலி மருந்து தயாரித்து விற்பனை செய்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும் ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து நடைமுறைப்படுத்தியிருக்கிறது என்பதை நீங்கள் எல்லாம் நன்கறிவீர்கள்.

ஆனால், அதற்கு முன்பு இந்தப் போலி மருந்து, அதிலும் காலாவதியான மருந்து இவற்றை விற்பனை செய்பவர்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்னவென்று பார்த்தால், கேலிக்கூத்தாகக்கூட அவை இருந்திருக்கின்றன. ஒரு குற்றத்தில் முக்கிய குற்றவாளி மீனாட்சிசுந்தரத்தின்மீது மருந்துக் கட்டுப்பாடு சட்டத்தின்படி மூன்று வழக்குகள், சைதாப்பேட்டை நான்காவது மாநகரக் குற்றவியல் நடுவர் நீதிமன்றத்திலே தொடரப்பட்டு தண்டனை வழங்கப்பட்டுள்ளது. என்ன தண்டனை என்றால் குற்ற வழக்கு எண் 3362/2001 என்பதில் மருந்து உரிமங்கள் இல்லாததால் மருந்துகளைக் கிடங்கில் பதுக்கி வைத்திருந்ததற்கும், மேலும் அந்த மருந்திற்குரிய கொள்முதல் விவரங்களைத் தெரிவிக்காமல் இருந்ததற்கும் வழக்கு தொடரப்பட்டது. இதற்கு ரூபாய் 7,000 அபராதமும், நீதிமன்றம் கலையும்வரையில் சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது. அதாவது முன்பு. அடுத்து மற்றொரு வழக்கான குற்ற வழக்கு எண் 270/2002 என்பதில் "மருத்துவர் மாதிரி மருந்து"களை (Physician samples) விற்பனைக்காக வைத்திருந்த குற்றத்திற்காக ஒருவர்மீது வழக்கு தொடரப்பட்டது. இதற்கு ரூபாய் 4,000 அபராதமும், நீதிமன்றம் கலையும்வரையில் சிறைத் தண்டனையும் என்று வழங்கப்பட்டது.

முற்பகல் 11-40

நீதிமன்றம் கலையும்வரையில் சிறைத் தண்டனை என்றால், அந்தத் தண்டனையை யார் வேண்டுமானாலும் சுலபமாக ஏற்றுக்கொள்வார்கள். நீதிமன்றத்திற்கு வேடிக்கை பார்க்கச் செல்வதுபோலச் சென்று, நின்று, நடைபெறுகின்ற வழக்குகளையெல்லாம் கவனித்துவிட்டு திரும்பி விடலாம். அதுதான் நீதிமன்றம் கலையும்வரையில் உள்ள தண்டனையாகும்.

2010 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

இந்த அளவுக்கு இதுபோன்று ஆபத்தோடு விளையாடுகின்றவர்களுக்கு தண்டனை கிடைப்பதை எண்ணிப் பார்த்துத்தான், 2009 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மத்திய அரசு, பொது மக்களுக்குத் தரமான மருந்துகள் கிடைக்கவும், போலி மருந்து தயாரித்து விற்பனை செய்பவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், மருந்து மற்றும் அழகு சாதனச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்தது. இதன்படி, போலி மருந்து தயாரிப்பவர்கள்மீது, அவர்கள்மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் 10 ஆண்டுகள் முதல் ஆயுள் வரை சிறைத் தண்டனையும், மேலும் குறைந்தபட்சம் ரூபாய் 10 இலட்சம் அபராதம் விதிக்கவும் சட்டத்திலே திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அந்தச் சட்டத் திருத்தத்திற்குக் காரணம் என்ன என்பதை இங்கே நடைபெறுகின்ற விவாதத்திலேயிருந்தே நீங்கள் எல்லாம் புரிந்து கொண்டிருக்கின்றீர்கள். எனக்கு இதிலே வருகின்ற அச்சம் என்னவென்றால், அதற்குத் தர வேண்டிய விளக்கம் எதுவாக இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன் என்றால், இந்தக் குற்றத்தை இரண்டு வகையாகப் பிரித்துக்கொள்ள வேண்டும்.

போலி மருந்து தயாரிப்பது, அது ஒரு வகை. காலாவதியான மருந்தை விற்பது, அது இன்னொரு வகை. போலி மருந்து தயாரித்தால் அது உயிருக்கே ஆபத்து. காலாவதியான மருந்தை விற்பனை செய்தால், அது எந்த வியாதியையும் குணப்படுத்தாது, அவ்வளவுதான். காலாவதியான மருந்து, சத்தில்லாத, சாரமில்லாத, எந்த விளைவுகளும் இல்லாத மருந்தாக ஆகிவிடுகிறது. ஆனால் போலி மருந்து, எதையோ போட்டு, மருந்து என்று ஒன்றைத் தயாரித்துக் கொடுத்தால் அது சமயத்தில் விஷமாகக்கூட ஆகிவிடுகிறது. ஆகவே, பொய் மருந்தாக, போலி மருந்தாக, விஷ மருந்தாக வருகின்ற அந்த மருந்தைவிட காலாவதியான மருந்துகள் கொஞ்சம் பரவாயில்லை என்றே நாம் எண்ண வேண்டும். இப்போது அந்தக் காலாவதியான மருந்துகளால்தான் அந்தப் பிரச்சினையே நம்முடைய மாநிலத்திலே ஆரம்பமாகி, நான் கடந்த திங்கள் மேலதிகாரிகளையெல்லாம் அழைத்து, தலைமைச் செயலாளர், D.G.P., Additional D.G.P., மற்றுமுள்ள மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், மக்கள் நல்வாழ்வுத் துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அவர்களையெல்லாம் அழைத்து ஒரு கூட்டம் நடத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார்கள். அந்த நடவடிக்கையின்படி, நான்

[கலைஞர் மு. கருணாநிதி] [2010 ஏப்ரல் 6

ஏற்கெனவே கூறியதுபோல, குற்ற வழக்கு எண் *3362/2001* என்பதில் மருந்து உரிமங்கள் இல்லாததால் மருந்துகளைக் கிடங்கில் பதுக்கி வைத்திருந்ததற்கும், மேலும் அந்த மருந்துக்குரிய கொள்முதல் விவரங்களைத் தெரிவிக்காததற்கும் வழக்கு தொடரப்பட்டது. இதற்கு ரூ.*7,000* அபராதமும் நீதிமன்றம் கலையும்வரை சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டது என்று வழக்கு ஒன்று சொன்னேனல்லவா! அதே நிலையான வழக்கின்மீது இப்போது அவர்களுக்கு வெறும் சிறைத் தண்டனை, நீதிமன்றம் கலையும்வரையில் என்று அல்லாமல், அவர்களுக்கு பத்து ஆண்டுக் காலம் சிறைத் தண்டனை விதிக்கின்ற அளவுக்கு சட்டம் திருத்தப்பட்ட பிறகு, வியாபாரிகள், மருந்து வியாபாரிகள், எந்த அளவிற்கு அச்சத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதும், கூடை கூடையாக குப்பை மேடுகளிலும், புழக்கடைகளிலும் அந்தப் போலி மருந்துகளையும் காலாவதியான மருந்துப் பொட்டலங்களையும் வாரி இறைத்துவிட்டு தப்பித்துக்கொள்ள முயல்கிறார்கள் என்பதையும் தினமும் நாம் செய்தியாகக் கேள்விப்படுகின்றோம். இந்த நிலை, நடவடிக்கை எடுத்ததால்தான் ஏற்பட்டிருக்கிறது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது.

முற்பகல் *11-45*

எப்போதுமே நம்முடைய வழக்கமாக என்ன இருக்கிறதென்றால், கள்ளச் சந்தையிலே இத்தனை மூட்டை அரிசி கேரளாவிற்குச் சென்றது என்று ஒரு செய்தி வந்தால், சென்றதை போலீஸ்காரர் பிடித்தார், அரசாங்க அதிகாரிகள் பிடித்தார்கள் என்று பாராட்டுவதை விட்டுவிட்டு, கள்ளச் சந்தை பெருகிவிட்டது என்றுதான் நாம் சொல்லுகின்ற ஒரு வழக்கத்தைக் கொண்டிருக்கின்றோம். ஆனால், நம்முடைய தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், அதைப் பிடிக்கின்றவர்கள் காவலர்களாக இருக்கின்றார்கள். அவர்களை நாம் பாராட்ட வேண்டும் என்ற அந்த நிலையை நாம் மாற்றிக்கொண்டு. கள்ளச் சந்தை பெருகிவிட்டது என்று கூறப்படுகிறது. அதைப் பிடிக்காமல் இருந்தால் அப்படிச் சொல்லலாம். பிடித்த பிறகுதான் கணக்கே நமக்குத் தெரிகிறது. ஆயிரம் மூட்டை அரிசி, ஆயிரம் டன் அரிசி, இரண்டாயிரம் மூட்டை அரிசி, இரண்டாயிரம் டன் அரிசி என்றெல்லாம் பிடிபட்டவைகளைச் சொல்லும்போதுதான் யார் பிடித்தார்கள் என்று தெரிகிறது. பிடித்ததற்கு ஒரு பாராட்டு இல்லை. ஆனால், பிடிபட்ட சரக்கு தமிழ்நாட்டிலேயிருந்து

2010 ஏப்ரல் 6] [கலைஞர் மு. கருணாநிதி]

செல்கிறது. தமிழ்நாட்டிலிருந்து செல்கிற சரக்கு கள்ளச் சரக்கு என்பதால் சர்க்கார்மீது, அரசின்மீது ஒரு குற்றஞ்சாட்ட அது பயன்படுமா என்றுதான் பார்க்கிறோமே அல்லாமல் அதைப் பிடித்தவர்களை, அதைத் தடுத்தவர்களைப் பாராட்ட வேண்டாமா என்ற எண்ணம் நமக்கு ஏற்படுவதில்லை. ஆனால் பொதுவாக, எதிர்க்கட்சிகளுக்கு அது ஏற்படாது; ஏற்படவும் கூடாது. ஏற்பட்டால், அப்படி எதிர்க்கட்சிகள் ஆளும் கட்சி எடுக்கிற ஒரு நடவடிக்கையைப் பாராட்டத் தொடங்கினால், பிறகு எதற்காக எதிர்க்கட்சி? தேவையில்லை. எனவேதான் பாராட்ட மாட்டார்கள். பாராட்டக்கூடாது என்ற எண்ணம், நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோதுகூட இப்படித்தான் இருந்தது. ஆனால், இப்போது நீங்கள் இருப்பதைப்போல இவ்வளவு முரட்டுத்தனமாக இல்லை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். மருந்துகளை அருந்தி மக்கள் சாகிறார்கள் என்பது சாதாரணமான விஷயம் அல்ல. அதை உணர்ந்துதான் உரிய நடவடிக்கைகளை, ஏற்ற நடவடிக்கைகளை, உடனடி நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்துக் கொண்டிருக்கின்றது. நான் இன்னும் சொல்லுகின்றேன். தொடர்ந்து அந்தப் பணி இப்போது நம்முடைய அதிகாரிகளால் நடைபெற்று வருகிறது. முதலில் நம்முடைய தமிழ்நாடு மாநிலக் காவல் துறை—சென்னை மாநகரக் காவல் துறை என்ற அளவிலே அவர்களை வைத்து நடத்தப்பட்ட இந்தப் போலி மருந்து வியாபாரிகளுடைய வேட்டை, அந்த வழக்கு இப்போது C.B.,C.I.D-க்கு மாற்றப்பட்டதற்குக் காரணமே, இதிலே வேறு சில மாநிலங்களும் தொடர்புடையவையாக இருக்கிற காரணத்தால், சென்னையைத் தவிர வேறு பல நகரங்களிலும் இத்தகைய கொடியவர்கள் இருக்கின்ற காரணத்தால், அவர்களையெல்லாம் வளைப்பதற்கு ஏதுவாக, சென்னை மாநகரக் காவல் துறை விசாரணை மாத்திரம் போதாது என்பதால் C.B.,C.I.D இதை விசாரிக்க வேண்டுமென்று உத்தரவிடப்பட்டது. இப்போது நாட்டிலே பல மாநிலங்களில் இது நடைபெறுகின்றது என்று தெரிய வருமேயானால் நாம் மத்தியிலே உள்ள C.B.I. விசாரணையே தேவை என்று உணர்ந்து அவர்களைக் கேட்கவும் தயங்கமாட்டோம். ஆனால் இப்பொழுது நடைபெற்ற இந்த விவாதத்தின்மூலம், பொதுமக்களிடையே பரவக்கூடிய பீதிக்கு அணை போட்டவர்களாக நாம் ஆக வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பொதுமக்களுக்கு இத்தகைய பீதி உணர்ச்சி ஏற்படுத்தக்கூடிய அளவிற்குச்

செய்திகளைப் பத்திரிகைகளும் வெளியிடாமல், நாமும் அந்தச் செய்திகளை - எதிர்க்கட்சிகள் வேகமாகத்தான் செல்லவேண்டும் என்று கருதி அவற்றையெல்லாம் சொல்லாமல் மறைக்க வேண்டுமென்று நான் கூறவில்லை—நீங்கள் இருக்கின்ற காரணத்தினால்தான், இருக்கின்ற தவறுகளைச் சுட்டிக்காட்டுகின்றீர்கள்; தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டால்தான் அவற்றைத் திருத்திக்கொள்கின்ற அந்த முனைப்பான எண்ணம் ஆளுங்கட்சிக்கும் ஏற்படுகிறது. அந்த வகையில் இன்று காலையிலேயிருந்து இதுவரை நடைபெற்ற மருந்துகளைப் பற்றிய இந்த விவாதம் பயன்படும் என்ற நம்பிக்கையோடு இந்த அளவில் இதனை நிறுத்திக்கொள்ள வேண்டுமென்று நான் மாண்புமிகு உறுப்பினர்களையெல்லாம் கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-50

4. அறிவிப்பு

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டப் பேரவை விதி *9(1)*-ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களை பேரவையின் *13*-வது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கிறேன்:

திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. து. அமரமூர்த்தி

டாக்டர் க. நெடுஞ்செழியன்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன்.

5. வரவு செலவுத் திட்டம், 2010–2011, பொது விவாதம்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2010-2011* ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம் - தொடர்ச்சி. முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. செந்தமிழன்.